நேயர்களே! பக்ஷிதரிசனத்துக்கு வருவோர் காலையில் ஸ்நான பானுதிகள் செய்து நித்யகர்மானுட்டானம் செய்து திருமலை யேறி சுவாமி தரிசனம் செய்து காலை 10-மணிக்கெல்லாம் பக்ஷிக்கு அன் னம் கொடுக்கும் இடத்தில் போய்ச்சேரலாம். சுமார் 10-மணிக்கு மேல் பண்டாரம் அவ்விடம் வந்து பக்ஷிக்கு அன்னம் கொடுப்பார் இதை தரிசனம் செய்தவர் இஷ்டப்பட்டவரை பக்ஷி பண்டாரத் துக்கத் தர்மம் செய்யலாம். இதுவே தவிர பக்ஷி தரிசைக்கு பத்து ரூபாய் என்றும் ஐந்து ரூபாய் என்றும் இரண்டரை ரூபாய் என்றும் கட்டளை ஒன்றும் கிடையாது. பக்ஷிக்காக ஏதாவது செய்யப்பட வேண்டுமானுல் தேவஸ்தானத்தில் காட்டி ரசீது பெறலாம். இதுவே தவிர வேறு கட்டாயம் ஒன்று மில்லை. இதை நேயர்கள் எல்லோரும் அறியவும் சுபம் உண்டாகவும்.

பக்ஷி பண்டாரங்கள் சிலர் திருமலையில் யாத்திரை வாசிகளி டம் வேத மந்திர சங்கல்பம் ஆசீர்வாதம் முதலிய செய்வது பாபத் துக்கிடமாகும். சைவப் பண்டாரங்கள் என்போர்கள் சூத்ரரே.

கண்டது உரைப்பேன்.

திராவிடன் திங்கட்கிழமை

13—8—1917

திருச்சழக்குன்றம்.

9—8—17

(ஒரு பிராமணர் அறிவிக்கிறார்.)

அன்னக் காவடி மடம்.—அன்னக்காவடி மடம் என்பதற்கு அன்னத்தைக்காவடி மூலமாகப் பரதேசிகள் பிக்ஷை எடுத்து சாப்பிடும் மடம் என்பது அர்த்தமாகும். இத்திருச்சழக்குன்றத்தில் பிரதக்ஷிணவழியில் சுடுகாட்டுக்கு அடுத்தாப்போல் மடம் ஒன்று வெகுநாளாக இருக்கிறது. இதில் பரதேசிகள் காவடி கொண்டு ஊரில் பிக்ஷை எடுத்து வந்து சாப்பிட்டு வருகின்றார்கள். சுமார் 30, 40 வருஷகாலமாய் முனிசாமி பரதேசி இம்மடத்திலிருந்து காலம் சென்ற பிறகு அவன் பத்தினியும் பெண்களும் இருக்கிறார்களாம். நியாயமாக யோசிக்கும்பக்ஷத்தில் இந்த இடம் கிராமப் பொதுவென்றே மதிக்க வேண்டும். இதை ஒருவரும் விற்கவாவது ஒற்றுவைக்கவாவது கூடாது. பரதேசிகள் பலர் சமாதானமாய் பிக்ஷை யெடுத்து உண்டு தங்குவதற்குச் சுதந்தரம் பெற்றது. ஒருவருக்கும் சுவாதீனமில்லை.

இப்படியிருக்க இந்த மடத்தை தேவஸ்தானத்துதர்மகர்த்தா அவர்கள் என்னதென்றும் அம்மடத்தில் குடியிருக்கும் முனிசாமி பரதேசி பெண்கள் தம்மதென்றும் வீண் வழக்குகள் பேசி வியவகாரத்தை உண்டுபண்ணுகிறார்கள். இச்சமயத்தில் கிராமத்தார்கள் பரதேசிகளை அம்மடத்தில் அமர்த்துவது நீதியாகும். தேவஸ்தானத்தார் இதுவிஷயம் பிரவேசித்தல் நியாயமில்லை. சுமார் 40 வருஷ அனுபோக பாத்தியதை முனிசாமி பரதேசி வகைராக்களுக்கு நிர் ஆக்ஷேபணீயா யுண்டு. நாளது தேதிவரையும் அன்னக்காவடி மடம் என்று பைமாஷ் கணக்கு முதலியவைகளில் ஸ்பஷ்டமாய் எழுதிபிருக்கிறது. அதை இப்போது மாற்ற ஒருவராலும் இல்லை. ஆனல் கிராமத்தார் என்னசெய்யவேண்டு மென்றால் பரதேசிகள் தங்கும் மடம் என்பதை ஸ்தாபித்து எவரும் விற்கவும் கொதுவைவைக்கவும் இல்லாமல் பாதுகாக்கவேண்டிய தவசியம். தேவஸ்தானத்தார் தமக்கிருக்கும் ஹோதாவினல் தங்களது என்று ஸ்தாபித்துக்கொள்ள ஏற்பது சுத்த அநீதியாகும்.

சப்ரிஜிஸ்டிரார்:—9-8-17ல் புதிதாய் காஞ்சிபுரத்திலிருந்து மாற்றுப்பெற்று வந்திருக்கிறார். சுமார் 31-வருஷ அனுபோகமும் பெரும் குடும்பியுமா யுள்ளவர். இவருக்கும் முன்னிருந்தவர்க்கும் தேவஸ்தான தர்மகர்த்தா அவர்கள் 8-8-17 இரவில் தேவஸ்தானத்தில் அவர் இஷ்டமித்திரர்களுடன் கல்விருந்து அமைத்தார்.

நாரதன்.

சுதேசமித்திரன் வெள்ளிக்கிழமை

பிங்களஹ பங்குனிமீ 2உ

திருக்கழுக்குன்றம்.

12—3—18.

ஒரு கிருபர் அறிவிக்கிறார்.

நகரத்தார் வேதபாடசாலை கழுணிவாசல் சி. செ. அ. க. ரு. விலாசத்து நகரத்து செட்டிமார்களால் 10 வருஷகாலமாக போதுமான செலவுடன் வேத பாடசாலை நடந்து வருகின்றது. ஆயினும் இதற்கு ஏற்படும் மணியக்காரர்களின் விபரீதச் செய்கைகளால் அடிக்கடி பாடசாலைக்கு கெடுதி உண்டாய் வந்தது. இதையறிந்த செட்டியார் தங்கள் ஊருக்கு அருகாமையில் விவேகியாயுள்ள ஒருவரை சுமார் 2, 3 வருஷகாலமாக அனுப்பியதில் பாடசாலை போன வருஷம் வரையில் சிறப்பாகவே நடைபெற்று சிறுவர்களும் அதிகமாய்ச் சேர்ந்து வேதபாடம் கிரமமாக நடைப்பெற்றது. சென்ற வருஷம் சித்திரை உற்சவமுதல் பாடசாலை குழப்பமடைந்து விபரீதமாய் வருகின்றதாகவும் மணியக்காரர் குறைந்துவிட்டது என்பதாகவும் பாடசாலை விசாரணை குறைந்து வருவதாகவும் வதந்தி ஊர்முழுவதும் உலாவுகிறது. குறை யார்பால் உளதோ தெரியவில்லை.

சிவராத்திரி மஹோற்சவம்:—தர்மகர்த்தா அவர்கள் தேக சௌக்கிய மில்லாமல் சென்னையிலிருந்தாலும் உற்சவ மாத்திரம் வெகு வைபவமாக நடந்தேறியது சந்தோஷிக்கத்தக்கது. பிரம்மோற்சவத்துக்குரிய ஏற்பாடுகள் வெகு மும்முரமாய் நடைபெற்று வருகின்றன. தர்மகர்த்தா கூடிய சீக்கிரம் சௌவுக்கியமாக வந்து சேருவாரென்று பக்தர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஸ்ரீ வேதகிரீஸ்வரர் தேவாலயத்து அறுபத்துமூன்று நாயன்மார் கும்பாபிஷேக பிரகடனம்.

ஒரு நிருபர் எழுதுகிறார்.

இத்திருக்கழுக்குன்றத்தில் நாளது பிங்களவூ பங்குனிமீ 14உ (27-3-18) புதவாரம் காலை 7 மணிக்குமேல் 8-30 மணிக்குள் மேஷலக்கினத்தில், நூதனமாய் வார்ப்பித்துள்ள அறுபான்மும்மை நாயன்மார்களுக்கு மஹா கும்பாபிஷேகம் சென்னையிலுள்ள "திருக்கழுக்குன்றம் அன்னதான சமாஜம்" என்று வழங்கும் அறுபான்மும்மை நாயன்மார் சபையாரால் நடத்தப்பெறும் (24-3-18) பானுவாரம் விக்கினேசுவரர் பூஜை வாஸ்து சாந்தி (25-3-18) சோமவாரம் அங்குரார்ப்பணம் யாகாரம்பம் (26-3-18) மங்களவாரம் யாகசாலை பூஜை (27-3-18) புதவாரம் காலை 7 மணிக்குமேல் 8-30 மணிக்குள் மகா கும்பாபிஷேகம். அடுத்த காளயுத்திவூ சித்திரை மாதம் நடத்தபெறும் பிரம்மோற்சவத்தில் ஷை மாதம் 6 தேதி வரும் அதிகாரநந்தி சேவையில் ஷை நாயன்மார்களுக்கு சுவாமியுடன் விசேஷ உற்சவம் நடத்தப்படும்.

தேசபக்தன், சனிக்கிழமை

28—8—1920.

ரௌத்திரிவூ ஆவணிமீ 13உ

ஆடிபூரத்திருநாள் திருக்கழுக்குன்றம்.

திருக்கழுக்குன்றம் ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ திரிபுர சுந்தரி யம்பாளது திருக்கலியாண வைபவங்களுக்குமுன் தக்க ஏற்பாடுகளுடன் யாவராலும் புகழப்படும் வண்ணமும் ஜனங்களுடைய மனதைக் கவரத்தக்கவாறு மிக்க விமரிசையாக நடைபெற்றது. உற்சவத்தின் நான்காம் நாளிலும் சில தினங்களிலும் இங்கிலீஷ் பாண்டு வாத்தியங்கள் முழங்கின. பதினோராவது நாள் இறுதித்தினம் மஹா அபிஷேகம் நடைபெற்றது. பஞ்சமூர்த்தி உற்சவம் மேன்மையாய் நடந்தது. உபயகாரர்கள் தருமகர்த்தா இவர்கள் ஊக்கமே இதற்குக் காரணமாகும். ஆலய தருமகர்த்தர் இவ்வூர் யூனியன் சேர்மன். இங்கு லோகல் பண்டு வைத்தியசாலை யொன்று ஏற்படுத்தியதும் ஜல வசதிக்கு அரசாங்க உத்திரவைப் பெற்றதும் இவரேயாகும். திருக்கழுக்குன்றம் சுகாதாரத்திற்குப் பேர்போனதாதலின் பல நோயாளிகள்

வந்து இங்கு பலநாள் தங்குகிறார்கள். தந்தி ஆபீசில்லாதது குறைவாயிருக்கிறது. கவர்ண்மென்டார் இதை உடனே கவனித்து தக்க ஏற்பாடுகள் செய்வார்களாக.

[குறிப்பு :—நமது பண்டை நாகரீகத்தைச் சிறப்பிக்கும் நாக சுரங்களைவிட்டு, அயல்நாட்டு வாத்திய முறையாகிய பாண்டு வாத்தியத்தை கோயில் உற்சவத்தில் தர்மகர்த்தர்களும் உபயக்காரர்களும் உபயோகித்தது இந்து தருமத்திற்கு இணங்கியதன்று. ப-ர்].

———

1921ஞ் ஏப்ரல்மீ 4உ

இந்து நேசன் திங்கட்கிழமை.

திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ வேதகிரீசுவர சுவாமியின் ரௌத்ரி-துன்மதி வருஷத்து நைமித்திக மஹோத்ஸவம்.

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிதாகாச சின்மய தேஜோரூபியாயும், அகில அண்ட பிண்ட சராசரங்களுடைய சிருட்டி, திதி சம்ஹார திரோதான அனுக்கிரகமென்கிற பஞ்ச கிர்த்தியங்களுக்குக் காரண பூதராயும், திருக்கழுக் குன்றத்திலுள்ள வேதாசலத்தின்பேரில் திவ்ய மங்களச் சொரூபியாக எழுந்தருளியிருக்கும் வேதகிரீஸ்வர சுவாமியின் மகிமை சுருதி, ஸ்மிருதி, ஆகமம், புராணம், இதிகாச முதலான இவைகளில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் இந்த க்ஷேத்திரத்தின் மகாத்மியத்தைப் பற்றி இப்போது சொல்லவேண்டியது ஒன்றும் இலலை. ஆயினும் க்ஷேத்திரங்களில் நடத்தப்படுகிற மஹோற்சவப் பத்திரிகைகளில் அந்தந்த க்ஷேத்திர மகிமைகளைச் சொலலுவது பெரியோர்களுடைய வழக்கமாயிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் நடத்தப் போகிற மஹோற்சவதத்துக்கு பகதர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு இந்த திருக்கழுக்குன்றத்தின் மான்மியங்களை யெழுத வேண்டியதாயிருக்கறது.

மெய்ந் நூல்களாகிய வேதாகமங்களில் வழங்கும் புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டத்திலுள்ள தொண்டை நாட்டில் தேவா

ரப் பதிகங்களையுடைய ஸ்தலங்கள் முப்பத்திரண்டிலும் ஸ்தல விசேஷம், தீர்த்த விசேஷம், மூர்த்தி விசேஷங்களுடையது திருக்கழுக்குன்றம். வேதங்களும் ருத்திரகோடியரும் நந்தி தேவரும் தேவேந்திரனும் மேன்மை பொருந்திய நாராயண மூர்த்தியும் பிரமதேவரும் துவாதசாதித்தரும் முனிகணங்களும் சப்தமாதாக்களும் சுப்ரமணியரும் சந்திரனும் பூஜித்த ஸ்தலம். இது உண்மைத் தவமுள்ள மார்க்கண்டேய முனிவரும் ஜம்புவாதி முனிவர்களும், அகஸ்தியமுனிவர், சுவபலமுள்ள வசிஷ்ட முனிவர், விஸவாமித்திரர், வாய்மையுள்ள ஜனகமுனிவர், அகலிகை, வருணன் இன்னும் அனேகரும் வேதகிரீசுவரரைப் பூஜித்துத் தங்கள் தங்கள் குறையை நிறைவேற்றிக் கொண்டார்கள். மேலும் இந்த க்ஷேத்திரத்துக்கு ருத்திரகோடி க்ஷேத்திரமான்மியம் 1. சங்கு தீர்த்த மான்மியம் 1. தேவேந்திர மான்மியம் 1. இந்திய தீர்த்த மான்மியம் 1. ஜம்பு தீர்த்த மான்மியம் 1. வசிஷ்டதீர்த்த மான்மியம் 1. மார்க்கண்டேய தீர்த்த மான்மியம் 1. அகலிகை தீர்த்த மான்மியம் 1, இவை முதலியன உண்டு. மேன்மை பொருந்திய அந்த ஸ்தலத்தின் மகிமையை வேதசாஸ்திர புராணங்களினுற்கூட சொல்ல முடியாதென்றும், வேதாசலத்தின் மத்தியில் பிரகாசிக்காநின்ற சுயம்பு வென்று சொல்லப்பட்ட சச்சிதானந்த மூர்த்தியாகிய பரமசிவம் சர்வதேவோத்தமரென்றும் அந்த மூர்த்தியை எவ்விதமாகவாவது தரிசித்து கிரிப் பிரதக்ஷிணம் செய்தால் சகல பாவங்களும் நிவர்த்தியாகி இஷ்டகாமியங்களை அடையலாமென்றும் சொல்லப்படுகிறது.

மேற்சொல்லிய மான்மியங்களுடைய இந்த க்ஷேத்திரத்தில் திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ வேதகிரீசுவர சுவாமி கீழ்க் குறித்த காலங்களில் திவ்யாற்புத அலங்கார வைபவத்துடன் கொண்டருளும் மஹோற்சவ திருக்கோலத்தை சிவ புண்ணியச் செல்வர்களாவரும் வந்து தரிசனஞ் செய்து இகபர சௌக்கியாதிகளை அடையவேண்டுமென வினயத்துடன் பிரார்த்திக்கின்றனம்.

1921-ம்வரு ஏப்ரல்மீ 11உ சோமவாரம் இரவு விக்னேஸ்வரர் உற்சவம்.

12-ந்தேதி மங்களவாரம் பகல் துவஜாரோகணம்; பல்லக்கு; இரவு புண்ணியகோடி விமானம்.

13-ந் தேதி புதவாரம் பகல் பவழக்கால் சப்பரம்; இரவு பூத வாகனம்.

14-ந் தேதி குருவாரம் பகல் அதிகார நந்தி 63 நாயன்மார்க ளுடன் கிரிப் பிரதக்ஷிணம்; பிரபல உற்சவம். இரவு சந்திரப் பிரபை.

15-ந் தேதி சுக்கிரவாரம் பகல் புருஷா மிருகம்; இரவு நாக வாகனம்.

16-ந் தேதி சனிவாரம் பகல் கதலி விருஷம்; இரவு விருஷப வாகனங்கள் பிரபல உற்சவம்.

17-ந் தேதி ஆதிவாரம் பகல் விமான்ம்; இரவு யாஜன வாகனம்.

18-ந் தேதி சோமவாரம் பகல் பஞ்சரதம்; இரவு சவுடல் விமானம்.

19-ந் தேதி மங்களவாரம் பகல் தந்தத் தொட்டி; இரவு குதிரை வாகனம்.

20-ந் தேதி புதவாரம் பகல் தந்தத் தொட்டி; இரவு சந்திர பிரபை.

21-ந் தேதி குருவாரம் பகல் சபாநாயகர்; சூரியபிரபை, விரு ஷபதீர்த்தம் தீர்த்தவாரி; நாயகர் தந்தத்தொட்டி, சங்குதீர்த்தம் தீர்த்தவாரி; இரவு அலங்கார கிரிப்பிரதக்ஷிணம், தந்தத்தொட்டி, ராவணேசுவர வாகனம்.

22-ந் தேதி சுக்கிரவாரம் இரவு தந்தத் தொட்டிகள்.

ரா. மு குமாரசாமி முதலியார்,

தேவஸ்தான தர்மகர்த்தா.

சுதேசமித்திரன் திங்கட்கிழமை, 20-6-21.

மதுரைக் கோயிலில் இரண்டு கழுகுகள்.

மதுரை, ஜூன் 18உ.

நேற்று காலை 10½ மணிக்கு ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் பொற்றாமரையில் இரண்டு வெள்ளைக் கழுகுகள் ஸ்நானஞ் செய்து கரையிலுட்கார்ந்திருந்தன. கோவிலில் அதிகாரிகளால் அன்னம்

நெய் முதலியன அவைகளுக்கு கொடுக்கப்பட்டன. பின்னர் புகைப் படம் பிடிக்கப்பட்டது. அவைகளைப் பார்ப்பதற்காக ஏராளமான ஜனங்கள் பொற்றமரையைச் சுற்றி கூடிவிட்டனர். பின்பு அவைகளை ஒரு சேவகன் கையில் பிடித்துக்கொண்டு போய் ஸ்வாமி தரிசனம் செய்து வைத்து கோவில் நந்தவனத்தில் விட் டான் கொஞ்ச நேரம் அக்கழுகுகளிரண்டும் அங்கேயிருந்து விட்டுப் பின் எங்கோ பறந்து போய் விட்டன. இங்குள்ளவர்கள் இதை ஒரு பெரிய விசேஷமாகக் கருதுகிறார்கள். அக்கழுகுகள் இரண்டும் திருக்கழுக்குன்றத்திலிருந்து வந்திருந்ததாகவும் சொல் லப்படுகின்றது.

இந்து நேசன்.

தன்மதிஞ ஆடிமீ 12உ 1921ஞ ஜூலைமீ 27உ

திருக்கழுக்குன்றம் ஸ்ரீ திரிபுரசுந்திரி அம்பாள்.

ஆடிப்பூர மஹோற்சவம்.

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிதாகாச சின்மய தேஜோரூபியாயும், அகில அண்டபிண்ட சராசரங்களுடைய சிருட் டிதிதி சம்ஹார திரோதான அநுக்கிரக மென்கிற பஞ்ச கிர்த்தி யங்களுக்குக் காரண பூதராயும், திருக்கழுக்குன்றத்திலுள்ள வேதா சலத்தின் பேரில் திவ்ய மங்கள சொரூபியா யெழுந்தருளியிருக் கும் வேதகிரீசுவர சுவாமிகளது மகிமை, சுருதி, ஸ்மிருதி, ஆகமம், புராணம், இதிகாச முதலான இவைகளில் விசேஷமாய்ச் சொல்லப் பட்டிருப்பதால், இந்த க்ஷேத்திரத்தில் மகிமையை நால்வர் முத லான அடியார்கள் பாடி யிருப்பதைப் பற்றியும், தேவர்கோனுகிய தேவேந்திரன் முதலான தேவர்களும் பிரம்மா விஷ்ணுக்களாலும் பூஜிக்கப் பெற்றதைப்பற்றியும், சங்கு தீர்த்த முதலான விசேஷ. தீர்த்தப் பெருமையைப் பற்றியும, இங்கு இப்போது சொல்ல வேண்டியது யாதொன்றும் விசேஷமில்லை. மேறசொல்லிய மான் மியங்களுடைய இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அமபா ளுக்கு, கீழ் குறித்த காலங்களில் தவ்யாத்புத அலங்காரவைபவத் துடன் கொண்டருளும் மஹோற்சவத் திருக்கோலத்தை சிவ புண்ணியச் செல்வர்கள் யாவரும் வந்து தரிசனஞ் செய்து இகபர சௌக்கியாதிகளை அடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றனம்.

1921ஸ்ரீ ஜூலைமீ 27உ புதவாரம் இரவு விக்கிநேசுவரர் உற்சவம், பெருச்சாளி வாகனம்:

28உ குருவாரம் பகல் துவஜாரோகணம் பவழக்கால் சப்பரம்; இரவு புண்ணியகோடி விமானம்.

29உ சுக்கிரவாரம் பகல் தந்ததொட்டி; இரவு பூதவாகனம்.

30உ சனிவாரம் பகல் அதிகாரநந்தி கிரி பிரதக்ஷணம்; இரவு சந்திர பிரபை.

31உ ஆதிவாரம் பகல் புருஷாமிருகம்; இரவு நாகவாகனம்.

ஆகஸ்டுமீ 1உ சோமவாரம் பகல் கதலி விருக்ஷம்; இரவு விருஷபவாகனம்.

2உ மங்களவாரம் பகல் காமதேனு வாகனம்; இரவு யானை வாகனம்.

3உ புதவாரம் பகல் இரத உற்சவம்; இரவு சுந்தரவிமானம்.

4உ குருவாரம் பகல் யாளி வாகனம்; இரவு குதிரைவாகனம்.

5உ சுக்ரவாரம் பகல் சூரியபிரபை; இரவு தந்ததொட்டி.

6உ சனிவாரம் பகல் சுந்தரவிமானம் தீர்த்தவாரி; இரவு புஷ்பபல்லக்கு, கிரிபிரதக்ஷணம், அவரோகணம் மௌன உற்சவம்.

7உ ஆதிவாரம் பகல் உற்சவம் பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம்; இரவு மூலஸ்தான அம்மன் மஹா அபிஷேகம், திருக்கலியாணம், பஞ்ச மூர்த்திகள் பிரபல விருஷப உற்சவம்.

மா. மு. குமாரசாமி முதலியார்,

தேவஸ்தானம் தர்மகர்த்தா.

திராவிடன்.

வெள்ளிக்கிழமை 1921ஆம் ஆகஸ்டுமீ 26உ

சங்கு தீர்த்தப் புஷ்கர மகாதீபம், திருக்கழுக்குன்றம்.

திருக்கழுக்குன்றம் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சிவஸ்தலங்களுள் ஒன்று. இது செங்கற்பட்டுக்கு 9 மயில் தூரத்திலுள்ளது. இங்கு பன்னிரண்டு வருடங்கட் கொருமுறை கும்பகோணத்தில் மஹா மகஸ்நானமும் கோதாவரியில் புஸ்கர ஸ்நானமும் செய்யப் படுவதுபோல் சங்கு தீர்த்த ஸ்நானம் செய்யப்படுகிறது. புண்ணிய நதிகள், தடாகங்கள் முதலிய யாவும், தங்கள் பாவங்களைச் சங்குதீர்த்த ஸ்நானத்தினாலேயே போக்கிக்கொண்டு சிறப்படைந்தன வென்று புராண இரத்தினமாய் விளங்கும் ஸ்காந்த புராணங் கூறுவதால், மற்ற தீர்த்தங்களிற் சங்கு தீர்த்தமே மேலானதாகும். இத்தினம் ஆவணிமாதம முதல் தேதி (16-8-21) வந்தமையின் அதற்கும் பலநாள் முன்னமே இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வந்து கூடினார்கள். அவர்கள் தொகை சுமார் 50,000 இருக்கும். அங்கு இக்கூட்டம் இதற்கு முன்னுங்கூடியதில்லை இனி 12 வருஷம் வரையும் கூடப் போவதில்லை என்று சொல்லலாம்.

அன்றையதினம் பகல் 12-மணிக்கு பஞ்சமூர்த்திகளோடு ஜனங்கள் திரள் திரளாகத் தடாகஞ்சென்று தீர்த்தமாடியது கண்களைக் கவரத்தக்க ஒரு பெருங்காட்சியாக விருந்தது. அவர்கள் அப்போது 'ஹர' 'ஹர' வென்றும் 'வேதகிரி' என்றும் இறைவனுடைய பெரிய பெயர்களை உச்சரித்ததனாலுண்டாகிய சத்தம் எல்லோருடைய காதுகளையும் செவிடுபடுத்தியது; வேறுவழிகளில் சென்றுகொண்டிருக்கும் மனதை ஒரு முகப்படுத்தி உலகத்தை மறக்கச் செய்தது; இது வேண்டும், அது வேண்டுமென்று இறைவனைக் கேளாது அன்பு காரணமாகவே செய்கின்ற ஒரு பெரிய பக்தியை விளைத்தது. தீர்த்தமாடியான பிறகு பலர் பலவிடங்களிலும் ஏழைகளுக்கு அன்னமிட்டார்கள். இது விஷயமாகச் சாது ஸ்ரீமத் கருணானந்த சுவாமிகள் செய்த முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

அன்று மாலை கோவிலிலும் மற்றும் பல விடங்களிலும் இலக்ஷதீபங்கள் ஏற்றப்பட்டன. இவ்விளக்குகள் வைக்கப்பட்டிருந்த இடங்களின் முன் உருவை மாற்றி அக்கினி உருவமாகச் செய்தன. இரவு பஞ்ச மூர்த்திகளுக்கும் மஹோற்சவம் மிக அழகாக நிகழ்ந்தது. அன்றைய திருவிழாக் கொண்டாட்டங்கள் யாவும் யூனியன்

சேர்மனும், ஆலய தருமகருத்தருமாகிய மிஸ்டர் மா. மு. குமாரசாமி முதலியார் அவர்களுடைய மிகுந்த ஊக்கத்தினாலேயே நிகழ்ந்த தென்று சொல்ல வேண்டும். அவர் செய்த ஏற்பாடுகள் யாவும் மிக நன்றாகவே காணப்பட்டன. இம்முறை இத்திருவிழாவை அதிவிமரிசையாக நடத்திய முதலியார் அவர்கட்கு ஜனங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். முதலியார் அவர்கள் கார்த்திகை மாதம் கடைசி திங்கட்கிழமை நடத்தும் சங்காபிஷேகம், அறுபத்துமூவர் பிரபல உற்சவம் இவைகளையும் மிக்க பிரயாசை எடுத்துப் புதிதாகவே செய்யத்தொடங்கினர்கள்.

புஷ்கர திருவிழா தினத்தன்று போலீஸார் செய்த ஏற்பாடுகளும் அவர்களுடைய உழைப்பும் யாவரும் புகழத்தக்கனவேயாம்.

ம. து. ந.

நவசக்தி.

துன்மதிஞ ஆவணிமீ 11உ

சங்குதீர்த்தப் புஷ்கரலக்ஷ தீபம்.

திருக்கழுக்குன்றம்.

திருக்கழுக்குன்றம் தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சிவஸ்தலங்களுள் ஒன்று. இது செங்கற்பட்டுக்கு 9 மைல் தூரத்திலுள்ளது. இங்கு பன்னிரண்டு வருடங்கட்கொருமுறை கும்பகோணத்தில் மஹா மக ஸ்நானமும், கோதாவரியில் புஷ்கர ஸ்நானமும் செய்யப்படுவதுபோல் சங்கு தீர்த்த ஸ்நானம் செய்யப்படுகிறது. புண்ணிய நதிகள், தடாகங்கள் முதலிய யாவும் தங்கள் பாவங்களைச் சங்குதீர்த்த ஸ்நானத்தினாலேயே போக்கிக்கொண்டு சிறப்படைந்தனவென்று புராண இரத்தினமாய் விளங்கும் ஸ்காந்த புராணங் கூறுவதால் மற்ற தீர்த்தங்களிற் சங்கு தீர்த்தமே மேலானதாகும். இத்தினம் ஆவணி மாதம் முதல் தேதி (16-8-21) வந்தமையின் அதற்கு பலநாள் முன்னமே இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து ஜனங்கள் வந்து கூடினர்கள்.

அன்றையதினம் பகல் 12-மணிக்கு பஞ்ச மூர்த்திகளோடு ஜனங்கள் திரள் திரளாகத் தடாகஞ் சென்று தீர்த்தமாடியது கண்களைக் கவரத்தக்க ஒரு பெருங் காட்சியாக இருந்தது. அவர்கள் அப்போது "ஹர" 'ஹர' வென்றும் 'வேதகிரி' என்றும் இறைவனுடைய திருப்பெயர்களை உச்சரித்ததனாலுண்டாகிய சத்தம் எல்லோருடைய காதுகளையும் செவிடு படித்தியது; வேறு வழிக

ளில் சென்று கொண்டிருக்கும் மனதை ஒரு முகப் படுத்தி உலகத்தை மறக்கச் செய்தது; இது வேண்டும், அது வேண்டுமென்று இறைவனைக் கேளாது அன்பு காரணமாகமே செய்கின்ற ஒரு பெரிய பத்தியை விளைத்தது. தீர்த்தமாடியான பிறகு பலர் பல விடங்களிலும் ஏழைகளுக்கு அன்னமிட்டார்கள். இவ் விஷயமாகச் சாது கருணானந்த சுவாமிகள் செய்த முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது.

அன்று மாலை கோவிலிலும் மற்றும் பல விடங்களிலும் இலக்ஷ தீபங்கள் ஏற்றப்பட்டன இரவு பஞ்சமூர்த்திகளுக்கும் மஹோற்சவம் மிக அழகாக நிகழ்ந்தது. அன்றைய விழாக்கொண்டாட்டங்கள் யாவும் யூனியன் சேர்மனும், ஆலய தருமகருத்தருமாகிய மஹாஸ்ரீ, மா. மு. குமாரசாமி முதலியார் அவர்களுடைய மிகுந்த ஊக்கத்தினாலேயே நிகழ்ந்ததென்று சொல்ல வேண்டுமே, அவர்கள் செய்த ஏற்பாடுகள் யாவும் மிக நன்றாகவே காணப்பட்டன. இம்முறை இத்திருவிழாவை அதி விமரிசையாக நடத்திய முதலியார் அவர்கட்கு ஜனங்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். முதலியார் அவர்கள் கார்த்திகை மாதம் கடைசி திங்கட்கிழமை நடத்தும் சக்கர பிஷேகம், அறுபத்துமூவர் பிரபல உற்சவம் இவைகளையும் மிக்க பிரயாசை எடுத்து புதிதாகவே செய்யத் தொடங்கினர்கள்.

புஷ்கர திருவிழா தினத்தன்று போலீசார் செய்த ஏற்பாடுகளும் அவர்களுடைய உழைப்பும் யாவரும் புகழத்தக்கனவேயாம்.

ம. து ந.

இந்து நேசன் செவ்வாய்க்கிழமை

திருக்கழுக்குன்றம்

4—12—21

(நமது நிருபர் எழுதியது)

ஸ்தல விசேஷம்

ஒவ்வொரு ஸ்தலத்தில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வாரமும் விசேஷமென இந்துக்கள் யாத்திரை போவார்கள். இந்த ஸ்தலத்திற்குக் கார்த்திகை மாதமும், அதனில் சோமவாரமும் விசேஷமாகும். சங்க தீர்த்தத்தில் ஸ்நானமும் ஸ்ரீ வேதகிரீசுவரருடைய சேவையும் முக்கியமானவை. கிரிப்பிரதக்ஷிணம் எல்லாக் காலங்களிலும் முக்கியமானதாதலால் அதனை யுத்தேசித்து வருகிற

பிணியாளரும் மற்றோரு மல்லாமல், கார்த்திகை சோமவாரச் சேவையைக் கருதி வாரந்தோறும் ஜனங்கள் ஏராளமாய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

விசேஷச் சிறப்பு

இன்று சோமவாரத்திற்கு முன்தினமே யாயினும் ஜனத்திரள் மிக அதிகமா யிருந்தது சனிக்கிழமை காலையிலிருந்தே ஜனங்கள் பல திசைகளிலுமிருந்து வந்து கூடத்தொடங்கினர்கள். வந்தவர் கள் சாமானியர்கள் மாத்திரமே யன்றிப் பிரபுக்களாயும் செல்வ வான்களாயும் பெரிய உத்தியோகஸ்தர்களாயுமிருந்தார்கள். இப் படிப்பட்ட அதிசயக் காட்சிக்குக் காரணம் என்னவென்று விசா ரித்ததில், திருவாவடுதுறை ஆதீன கர்த்தராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிர மணிய தேசிக பண்டாரசந்நிதி யவர்களுடைய ஜன்மநக்ஷத்திரத்தை முன்னிட்டு இன்றைத்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஸ்ரீ வேதகிரீசுவர சுவாமிக்கும் திரிபுரசுந்தரி யம்மைக்கும் விசேஷ அபிஷேகாதிகள் நடப்பிக்கிறார்களென்றும், அந்தச் சிறப்புக்களைக் காணும் பொ ருட்டு இத்தனை ஜனங்கள் வந்து கொண்டிருக்கிறார்களென்றும் அறிந்தேன்.

விசாரிசை

ஏழைகளுக்கு அன்னமிடும்பொருட்டுத் தஞ்சாவூர் ஜில்லா அரிசி மூட்டைகளும், காய்கறி பதார்த்த வகைகளும், புஷ்பங்களும், கனி வர்க்கங்களும்வண்டி வண்டியாக முன்தினமே வந்து குவிந்தன. திருவாவடுதுறையிலிருந்து காரியஸ்தர்களும் பொறுப்பான விசா ரணைக் கர்த்தர்களும், அவர்களுக்கு வேலையாட்களும், நாகசுரத்திற் பிரசித்தி பெற்ற திருமருகல் நடேசனென்பவனுடைய மருமகனு கிய இராஜரத்தின பென்பலனுடைய மேள ஜதையாரும் வந்திருக் கிறார்கள். சென்னப்பட்டணத்திலிருந்து அநேகங் கனவான்களும் உத்தியோகஸ்தர்களும் சைவாபிமானிகளும் வந்திருக்கிறார்கள்.

அபிஷேகாதிகள்

இன்று காலை எட்டு மணிக்கு அபிஷேக சாமான்களும் நிவே தனத்துக்குரியவைகளும் வேத பாடசாலைக் கட்டடத்திலிருந்து மேளதாளங்களோடு மலைமீது கொண்டுபோகப் பட்டன. அபி ஷேகத்திற்கான கலசங்களை ஸ்தாபனஞ் செய்து பூசித்த பின்னர், மகந்நியாஸ ஜபமும் ஏகாதச ருத்ர ஜபமும் அபிஷேகமும் தொடங்கின. இந்த வைதிக காரியங்களெல்லாம் நிறைவேறு வதற்கு ஒரு ஜாம நேரத்திற் கதிகம் பிடித்தது.

அபிஷேக விசேஷங்களும், அன்னங்காணுத சிவபிரானுடைய முடி அன்னங் கண்ட தென்னும்படி அன்னாபிஷேகமும், விபூதி

யபிஷேகமும், சந்தனாபிஷேகமும் மிகச் சிறப்பாயிருந்தன. அந்த விபூதியுஞ் சந்தனமும் அபிஷேகானந்தரம் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் ஈசுவர சன்னிதியில் ஜன நெருக்கம் வெகு அதிகம். பின்னர், பற்பல ஊர்களிலிருந்து வந்திருந்த மலர்மாலைகளினால் ஸ்ரீ வேதகிரீசுவரருக்குத் திவ்வியாலங்காரம் செய்தார்கள். விக்கினேசுவரர், சுப்பிரமணியர், ஸ்ரீ நடேசப் பெருமான், திருமலைச் சொக்கியம்மை, ஸ்ரீ வேதகிரீசுவர மூர்த்தியாகிய இந்தச் சன்னிதிகளுக் கெல்லாம் பட்டாடைகள் சமர்ப்பித்து அர்ச்சனை செய்வித்தார்கள். ஸ்ரீ வேதகிரீசுவரருக்கு ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்வித்துப் பிரபலிவேதனங்களும் செய்தார்கள்.

சம்பாவனை

வைதிகர்களுக்கும், ஆதிசைவர்களுக்கும், அபிஷேகஸ்தர்களுக்கும், திருமஞ்சனாதி கைங்கரியக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் யோக்கியதானுசாரமாகச் சம்பாவனைகளை வழங்கி, மலையுச்சியினின்று இறங்கிவரும் படிக்கட்டுகளில் இருபுறமும் நின்றிருந்த ஏழை ஜனங்களுக்குத் தாராளமாகக் காசுகொடுத்துக்கொண்டே, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பண்டாரசந்நிதி யவர்களை அநேக ஜனங்கள் வாழ்த்த, அவர்களுடைய காரிய நிர்வாகிகள் தரைத்தளத்திற்கு வந்தார்கள்.

அன்னதானம்

அன்னமிடுவதில் பண்டாரசந்நிதி யவர்களுக்கு அதிக ஆனந்தமிருக்கிறதென்று தெரிகிறது. இதற்கென மேலே விவரித்தவாறு திருவாவடுதுறையிலிருந்து அவர்களனுப்பிய சாமான்களோடு வாழையிலைக் கட்டுகளையும் தேங்காய் மூட்டைகளையுங்கூட அனுப்பியிருப்பதினாலே அன்னமிடுவதில் அவர்களுக்குள்ள சிரத்தை புலப்படுகின்றது. அவர்களுடைய உத்தரவுப்படி இந்த ஸ்தலத்திலுள்ள தீக்ஷிதர்களுக்கும் வைதிகர்களுக்கும் போஜன சாமக்கிரிகளை அவரவருடைய இல்லத்திற்கு அனுப்பிக் கொடுத்தார்கள். மற்றப் பிராமணர்களுக்கு ஓரிடத்திலும், பலவகைச் சைவர்களுக்கு மற்றோரிடத்திலும் அன்னமளித்ததல்லாமல், ஏராளமான ஏழை ஜனங்களுக்கும் வயிறாரச் சோறாட்டினார்கள். இவ்வூரில் சைவர்களின் சமூக மதிகம் இவர்களெல்லாரும் பெண்டு பிள்ளைகளோடு திருப்தியாக உண்டு, தம் இனத்தவர் திருவாவடுதுறை ஆதீனகர்த்தராய் அமைந்தது ஸ்ரீ வேதகிரீசுவரருடைய அருட்பெருமையே யென்று நினைத்து, இந்த ஸ்தலாதீசனுக்கு இப்படிப்பட்ட சிறப்பு சீகிரத்தில் நடைபெறுமென்று தாங்கள் எண்ணியிருந்தவாறு நிறைவேறியதற்கு மிகச் சந்தோஷித்துப் பண்டார

சந்நிதியவர்களை வாழ்த்தினர்கள். இவ்வாறு அன்ன மருந்தியவர் களெல்லாருக்கும் பணதக்ஷிணையும் திருப்திகரமாகக் கொடுக்கப் பட்டது. இவ்வாறு இரவில் 8 மணி வரையில் எல்லாருக்கும் அன் னமளித்துக்கொண்டே யிருந்தார்கள். இதனை நிர்வகித்த மிஸ்டர் வேதாசல பண்டாரம் என்பவருடைய ஊக்கமும் உழைப்பும் குறிப் பிடத்தக்கன வயிறு நிரம்பச் சோறும். கைநிரம்பக் காசும் கிடைக் கப்பெற்ற இத்தனை மகாஜனங்களும் ஏழைபரதேசிகளும் வாழ்த்தி யதே உண்மையான வாழ்த்து வயிறு நிறைந்த பிறகு கூறும் வாழ்த் துமொழியே பனப் பூர்த்தியாக வருக்கும் என்பதை எண்ணியே எல்லாச் சம்பவங்களிலும் போசனத்திற்குப் பின்பே ஆசீர்வாதஞ் செய்து அக்ஷதை கொடுப்பார்கள்.

அம்பிகைக்கு அர்ச்சனை

தரைத் தலத்திலுள்ள ஆலயத்தில் எல்லா சந்நிதிகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை, நிவேதனம் முதலியன செய் வித்துப் பட்டாடைகள் சமர்ப்பித்துத் திருபுர சுந்தரி யம்மைக்குச் சகச்ர நாமார்ச்சனை செய்வித்தார்கள். இவ்வம்மைக்கு அபிஷேகங் கள் பாதத்திலேயே செய்யப் பட்டன. ஓர் ஆண்டில் குறித்த மூன்று தினத்தில் மாத்திரமே சிரசின் மீது அபிஷேகம் செய் வது வழக்கமாம். பின்பு, விக்னேசுவரையும் சந்திரசேகர மூர்த் தியையும் காஞ்சீபுரம் முதலான இடங்களிலிருந்து வந்திருந்த பெரிய திண்டிமலர் மாலைகள் முதலியவைகளாலும் திவ்வியாபரணங் களாலும் அலங்கரித்து. உட்பிராகாரத்திலும் வெளிப் பிராகாரத்தி லும் தீவட்டி மத்தாப்பு மேள தாள கான நிருத்தியங்களுடன் எழுந்தருளச் செய்தார்கள். ஆனந்தத்து வாத்தியக்காரனுடைய நிறமையைக்கண்டு களித்து அனேக ஜனங்கள் இந்தத் திருவுலா வைத் தொடர்ந்து நடந்தார்கள்.

கோவில் தர்மகர்த்தா

இந்த ஸ்தலத்து தேவாலய தர்மகர்த்தராகிய மிஸ்டர் எம். குமாரசாமி முதலியார் என்பவர் மேற் சொல்லிய அபிஷேகாதிகளை யும் சிறப்புக்களையும் நடப்பிப்பதில் மிக்க ஊக்கமும் உற்சாகமும் காட்டினர் அவருடைய உற்சாகத்திற்குக் காரணங் காட்டுவது எளிது. இளமைப் பருவத்தில் தம்முடன் கூடி விளையாடி ஒருமித் துழன்றவர் ஒருவர் சைவ ராஜாதி பத்தியம் வகிக்கும்படி வந்த பெருமையை எவரே பாராட்ட மாட்டார்? எனினும், விவகாரங் களில்மிக்க வியாபகமும் செல்வாக்கும் வாய்ந்துள்ள மிஸ்டர் முதலி யாரவர்கள் தாமே முன்னின்று வெகு சீக்கிர காலத்தில் இவ்வளவு பெரிய சிறப்புக்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் அமைத்தது பாராட் டத்தக்கது. இவருக்கு ஜோலிகள் அனேகம். அவைகளை யெல்லாம்

ஒதுக்கி வைத்து இவர் இந்தக் காரியத்தில் முனைந்து தமக்குச் சந்தோஷமாயும் எல்லாருக்குந் திருப்திகரமாயும் நடபித்தாரா தலால் இதனை விசேஷமாகக் குறிப்பிட்டேன்.

விசேஷ ஆதாரணை.

இம்மதி 5-ந்தேதி திங்கட்கிழமை பிரத்தியேகமான தேவால யத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீருத்ர கோடீசுவரருக்கும், சமயசாரிகள் நால்வருக்கும், விசேஷ அபிஷேகங்களும் அரச்சனை களும் செய்விப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இவ்வளவு தாராளமான மனத்துடன் சிவ பெருமானைச் சிறப் பித்து அடியார்களுக்கு அன்னமிட்டருளி ஆனந்திப்பதே முதன்மை யான காரியமாகக் கெண்டுள்ள திருவாவடுதுறை ஆதீன கர்த்தரா கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பண்டார சந்நிதியவர்கள் சிரஞ் சீவியாகச் சிறப்புற்று வாழ்க.

இந்து நேசன்.

1922ஞ் நவம்பர்மீ 25உ

இக்கார்த்திகைமீ 26உ சோமவாரம் திருக்கழுகுன்றத்தில் சங்காபிஷேகமாதலின் அன்பர் பலரும் இச்சபையின் சார்பாக ஆண்டு விஜயம் செய்து அதனை தரிசித்துக் களிப்புற வேண்டுகை யென்று ஸ்ரீமான் சுவாமி கருணானந்தர் அறிவிக்கிறார்.

சுதேசமித்திரன்.

செவ்வாய்க்கிழமை 9—1—1923.

திருக்கழுக்குன்றம்.

வேதாத்யான அபிஷேகம் :—ஸ்ரீ வேதகிரிப் பெருமானுக்கு 6-1-23 முதல் 9-ஆம்தேதிக்கு வேதாத்யாயன அபிஷேகம் ருத்ரார்ச் சனை நடத்தி வருவதாக சில பிராமணர்கள் ஏற்பாடு செய்திருப் பதாக நிச்சயித்திருக்கிறார்கள்.

ஜலவசதி :—திருக்கழுக்குன்றத்தில் 20,000 ரூபாய் செல வழித்து குசவன்கிணற்றை இடித்து அகலமாக்கி ஜலம் இறைத்து ஊர்முழுதுக்கும் மூன்றே குழாய்கள்வைக்க யூனியன் போர்ட்டார் முயற்சித்து வருகிறார்கள், தடாகங்கள் குளங்கள் கிணறுகள் முத

லிய நீர்வளம் நிரம்பப்பெற்ற இவ்வூருக்கு குழாய்ஜலம் அவசிய மில்லையென்றும் தற் பாதுள்ள தாங்கக்கூடாத யூனியன் வரியுடன் தண்ணீர்வரியும் கட்ட இவ்வூர்க் குடிகள் தங்களுக்குச் சக்தி யில்லை யென்றும் சென்னை கவர்னருக்கு வரி செலுத்துவோர் மகஜர் செய் திருக்கிறார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுதேசமித்திரன்.

15-2-23.

திருக்கழுக்குன்றத்திற்கு மைசூர் மகா ராஜாவுடைய தாயார் விஜயம் செய்ததைமுன்னிட்டு தேவஸ்தான தர்ம கர்த்தா ஸ்ரீமான் குமாரசாமி முதலியார் அவரை வரவேற்று உபசரித்தார் என ஒரு நிபர் எழுதுகின்றார்.

Shree Vani Vilas Sannidhana H. H. The Maharani of Mysore C. I.

இந்து நேசன்.

சனிக்கிழமை 1923ஞ மேமீ 19உ

THE THIRUKALIKUNDRAM SHRINE.

திருக்கழுக்குன்றம்.

செங்கற்பட்டுக்குத் தென்கிழக்காக 9 மைல் தூரத்திலுள்ள 'பக்ஷிதீர்த்தம்' என்கிற இச்சிறு ஊரில் சரீர சௌக்கியார்த்தமாக சென்ற ஒரு மாதகாலமாக வந்திருந்த நான் பிறர் பிரயோஜனத் தின் பொருட்டு எனது அனுபவங்களை இந்நிரூப மூலமாகச் சிறுகத் தெரிவிக்கிறேன். இவ்வூரைச் சுற்றி நாலுபக்கங்களும் வயல் வெளி களாயிருப்பதால், எப்பொழுதும நல்ல காற்று வீசுகின்றது. ஸ்ரீ வேதகிரீசர் ஆலயங்கொண்டு எழுந்தருளியிருக்கும் வேதகிரி பர்வ தத்தைச் சுற்றி $2\frac{1}{4}$ மைல் வட்டத்தில் அமைந்திருக்கும் பிரதக்ஷிண சாலை நேத்திரத்துக்கு ரம்பியமாயும் சரீரத்துக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும் உத்ஸாகத்தையும் உண்டு பண்ணக் கூடியதாயு மிருக்கிறது. இந்தப் பிரதக்ஷிண சாலையில் வலம் வருவதால் மலை யிலுள்ள 'சஞ்சீவி' என்கிற ஓர்வித மூலிகையின் காற்று சரீரத்தில் பட்டு பலவகை வியாதிகள் அனுகூலமாவதாகச் சொல்லுகிறார்கள்.

டாக்டர்கள் அனுகூலமாவதாகச் சொல்லுகிறார்கள். டாக்டர்கள் அனுமதிபெற்று அநேகம் நோயாளிகள் இங்கு அடிக்கடி வந்து வஸிப்பது பிரசித்தம். 'சங்கதீர்த்தம் என்கிற அகண்ட புஷ்கரணி யொன்றிருக்கிறது. அதன் ஜலம் உலோக சம்பந்தமான தென்றும் எவ்வித ஜாட்டியத்தையும் உண்டு பண்ணுகிறதில்லை யென்பதும் பிரஸித்தம். அதைத்தான் ஸ்நானபானாதிகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். சுருங்கக் கூறுமிடத்தில், கோடை கழிக்க ஏகிரி, கொடைக்கானல் முதலிய மலைவாஸத்துக்குப் போகவியலாத எம் போலிய சாமானியர்களுக்கு இந்த வேதகிரி வாஸம் வெகு சிலாக்கியமென்றே துணிவாய்க் கூறலாம்.

சுகாதாரம்:—யூனியன் சுத்தமாக இருக்கிறது. சங்க தீர்த்தத்தைத் தவிர வேறு ஜலாதாரங்கள் இல்லாமையால், அந்தத் தீர்த்தத்தை ஜனங்கள் கெடுக்காமல் பாதுகாக்க வேண்டியது சேர்மன் அவர்களின் இன்றியமையாத கடமையாகும். குஷ்ட ரோகிகள், பஹிஷ்டா ஸ்திரீகள் முதலியவர்கள் தண்ணீரில் இறங்கி ஸ்நானம் செய்யாமலும் அழுக்குத் துணிகள் கழையாமலும் வேண்டிய விதிகள் ஏற்படுத்தி அவைகளை மீறுகிறவர்களைச் சார்ஜ் செய்ய வேண்டும்.

தேவஸ்தானம்:—இவ்வூரில் சமீபத்தில் முடிவு பெற்ற பிரம்மோத்ஸவம் வெகு விமரிசையாகவே நடந்தேறியதெனினும் ஸ்வாமியின் வீதிப் புறப்பாடு காலாகாலத்தில் நடக்காமை கவனிக்கத்தக்கது. ஆலயத்திலுள்ள சிற்பவேலைகள் வெகு அழகாகவிருக்கின்றன; பெரிய பிராகாரத்தில் 'ஆமை மண்டப' மென்ற வோர் மண்டபமிருக்கின்றது. அதன் தூண்களின் சிற்பவேலைகள் கண்ணைக் கவர்வனவாக அழகாகயிருக்கிறது. சிற்பசாஸ்திரிகள் இதைக்கவனித்திருப்பார்களென்று நம்புகிறோம். இந்த மண்டபத்தின் பேரிலுள்ள புல் பூண்டுகளைக் களைந்து மண்டபத்தைச் சுத்தமாய் வைக்க வேண்டியது அவசியமாகும் இந்த தேவஸ்தானத்துக்கு ஐவேஜி கம்மியாயும், நிர்வாகம் ஜாஸ்தியாயும் இருப்பதில் கோவில் சம்பந்தமான முக்கியமான ரிபேர் முதலிய விஷயங்கள் கவனிக்காமல் விடப்பட்டிருக்கின்றனவாம். தர்மகர்த்தா ம-ள-ஸ்ரீ மாரசாமி முதலியார் அவர்கள் தேவஸ்தான விஷயங்களில் அக்கரையுடன் உழைப்பவரென்றும், வருவாய்க்கு மிஞ்சி செலவு செய்து புது ஆக்டுக்குச் சிண்டைக்கொடுக்கக்கூடியவரல்லவென்றும் தெரிகிறது.

சத்திரங்கள்:—இவ்வூரில் சத்திரங்கள் அனேகம் உள. பெரும்பாலும் சென்னையிலுள்ள தனிகர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில சிபார்சின் பேரில் வரும் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கும் தனிகர்களுக்குமே கிடைக்கும், மற்றும் சில பிராமணரல்லாதார்க்குச் சாதாரணமாய்க் கிடைக்கின்றன. நாட்டுச்சோட்டை கழனி வாசல் சி. செ அ. வேதபாடசாலையொன்றும்

அதைச் சேர்ந்த சத்திர மொன்றும் இருக்கிறது. இதில் பாட சாலைப் பிள்ளைகளுக்கு ஆகாரவஸ்திராதிகள் இலுமாய் அளிக்கப் படுவதன்றி தேசாந்தரிகளுக்கு சிற்சில சமயங்களிலும், சித்திரை பிரம்மோத்ஸவத்தில் பத்துதினங்களிலும் வரும் பிராமணர்களுக் கு வருக்கும் திருப்தியாக அன்னம் அளிக்கப்படுகிறது. இதற்கு அமைந்திருக்கும் மணியகாரர் வெகு நிர்வாகியாகக் காணப்படுகிறார். புகார்களில்லையாம். அன்ன தானமும் இதரதானங்களும் சிறந்த தாயிருக்க அதன் சிறப்பையும் பலனையுமுணர்ந்து, பிரம்மத்து வேஷம் தலைமட்டங்கொண்டிருக்கிற தற்காலத்திலும், பிராமண ரல்லாதாராகிய நாட்டுக்கொட்டை செட்டிமார்கள் பிராமணர்களுக் குப் படிப்புக்கு உதவி அன்னமளித்து வருவது நன்குபாராட்டத் தக்கது. அன்னோர் செய்யும் தருமத்தைப் பாதுகாக்க நியமிக்கப் பட்டவர்கள் புகாரின்றிச் சிறப்பாய் நடத்தி வைத்து முதலாளி களின் திருப்திக்குப்பாத்திரமாவது பெருந்தருமமுமன்றி புகழ்ச்சி தரத்தக்க விஷயமுமே. இவ்வூரில் பிராமணர்கள் தங்குவதற்கு விடு திகள் சௌகரியமாயில்லை. இந்தக் குறையை நிவர்த்திக்க யார் முன்வருவார்களோ? கோவில் தர்மகர்த்தாவும் யூனியன் சேர்மனு மாகிய மிஸ்டர் எம். எம். குமாரசாமி முதலியார் அவர்களுடைய உதவியை நம்பித்தான் இங்கு அநேகர் வருகிறார்கள். ஜாதி வித்தி யாச மின்றியும் ஏழை பணக்காரர் என்ற பேதம் பாராமலும் இவ் வூருக்கு சுவாமிதரிசனத்துக்காகவும், சரீர சௌக்கியார்த்தமாகவும் வருகிறவர்களுக்கு அவர் இயற்றிவரும் உதவி மறக்கத்தக்கன்று.

தபால்:—இவ்வூரில் பிரதினமும் ஒரேதடவை பகல் 11-மணிக்குத் தபால் கட்டுகிறார்கள். பகல் 3மணி சுமாருக்குத் தபால் டெலிவரியாகிறது. இங்கே சென்னை ஜனங்களின் வரத்துப்போக் கின் நிமித்தம் விசேஷ தபால்கள் சேர்வதால் சாயங்காலமும் ஒரு தடவை தபால் கட்டவேண்டியது மிக்க அவசியம். மேலும் இங்கு தந்தி ஆபீசு இல்லாதது பெருங்குறையாக உணரப்படுகிறது. இதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்கவேண்டியது அவ சியம்.

பக்ஷிவிசேஷம்:—சாபமுற்ற எட்டு முனிவர்கள் யுகத்துக்கு இருவராக கழுகு உருவங்கொண்டு தோன்றிப் பரமசிவனைப் பூஜி த்துஸாயுஜ்ய பதவியை அடைவதாயும், அவ்வாறு கலியுகத்தில் 'பூஷா' 'விதாதா, என்ற இரண்டு முனிவர்கள் கழுகு உருவங் கொண்டு இக்கழுகுன்றத்தில் தங்கி வேதகிரீசரைப் பூஜித்துவருவ தாகவும் புராணக்கொள்கை. அனுதினகாலந் தொட்டு இந்த க்ஷேத் திரத்தில் இரண்டு கழுகுகளுக்குப் பிரதினமும் பகலில் மலைக்கோ வில் சர்க்கரைப் பொங்கல் ஆகாரமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கைங்கரியத்துக்கு கோவிலில் திட்டமுண்டு. இது பண்டா

ரங்கனைக் கொண்டு செய்விக்கப்படுகிறது. பண்டாரம் 11-மணி சுமாருக்கு நெய் பொங்கல் முதலியனவை வைத்துக் கொண்டு உட்கார்ந்து நமஸ்கரித்துப் பூஜை செய்து பக்ஷிகளின் வரவை எதிர் பார்க்கிறதும் சற்று முன்னும் பின்னுமாகவே அல்லது சேர்ந்தோ இரண்டு கழுகுகள் வந்து அப்பண்டாரத்தின் கையில் அன்னத்தை புசித்துவிட்டுப்போகின்றன. இக்காக்ஷியைக் காண தேசாந்திரங்களிலிருந்து வரும் ஜனத்தொகைக்கு அளவில்லை. கவர்னர்கள், கலெக்டர்கள், ஜட்ஜிகள், ராஜாக்கள் முதலியவர்கள் பார்வையிட்டு இதைக்குறித்து ஆலய ரிகார்டில் எழுதியிருக்கிறார்கள்.

T. R. S,

GRAND FUNCTIONS AT TIRUKALUKUNDRAM

திருக்கழுக்குன்றத்தில் நிகழ்ந்த விசேஷ வைபவங்கள்.

இந்து நேசன்

நாளது டிசம்பர்மீ 24, 25 தேதிகளில் இவ்வூர் தேவாலய தருமகர்த்தர் ம-ரா-ரா-ஸ்ரீ மா. மு. குமாரசாமி முதலியார் அவர்களால் ஸ்ரீ திரிபுரசுந்தரி யம்மனுக்கும் ஸ்ரீ வேதகிரீசுவர ஸ்வாமிக்கும் விசேஷ அபிஷேக அர்ச்சனைகள் நடத்தப்பெற்றன. ஸ்ரீமான் முதலியார் அவர்களுடைய ஆப்த நண்பராகிய ம-ரா-ரா-ஸ்ரீ ராவ் பகதூர் வே. மாசிலாமணிப் பிள்ளையவர்கள் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜியாக நியமனமடைந்ததை முன்னிட்டும், முதலியார் அவர்களுடைய விசேஷ நன்றிக்கும் பிரியத்துக்கும் பாத்திரமான கனம் ஸர் பி. இராஜகோபாலாசாரியர் C. I. E. அவர்கள் வருகிற ஜனவரிமீ 1ஆ இந்தியா கௌன்ஸில் மெம்பராக நியமனம் பெற்று இங்கிலாந்துக்குப் புறப்படப் போவதை முன்னிட்டு அவருக்குப் பிரயாண மங்களோபசாரம் செய்வதற்காகவும் முதலியார் அவர்கள் தம்முடைய சொந்தச் செலவில் ஈசுவர ஆராதனைகள் செய்வித்துத் தன்னுடைய நண்பர்களனேகருக்கு அழைப்புப் பத்திரமனுப்பி வரவழைத்து விமரிசையாகக் கொண்டாடினார். இவரழைப்புக் கிணங்கி சென்னை, செங்கல்பட்டு முதலிய இடங்களிலிருந்து அநேகம் பெரிய உத்தியோகஸ்தர்களும் இதர கனவான்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். கனம் ஸர் பி. இராஜகோபாலாசாரியர், சென்னை ஸ்மால்காஸ் ஜட்ஜி மிஸ்டர் பாண்டலேயும் அவர் மனைவியும், கனம் ஜஸ்டிஸ் வே. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், ஸர் டி. சதாசிவய்யர், ஸர் எம். ஸி. டி. முத்தய்ய செட்டியார் அவர்கள். மிஸ்டர் ஏ. ராமஸ்வாமி முதலியார் எம். எல். ஸி., ராவ்பஹதூர்

என். கோபாலஸாமி அய்யங்கார் அவர்கள், மிஸ்டர் கே. கோவிந் தாசாரியார், சூரம்பேடு ஜமீன்தார் திவான் பஹதூர் அருணாசல முதலியார் அவர்கள், செய்யூர் ஜமீன்தார் ஸி. முத்தய்யா முதலி யார் அவர்கள் M. L. C.; செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட்டு போர்டு பிரெஸிடெண்டு ராவ் பஹதூர் வெங்கடராசவலு ரெட்டியார் அவர் கள், மிஸ்டர் எம். கிருஷ்ணஸாமி ரெட்டியார் அவர்கள், சென்னை வக்கீல்களான மெஸர்சு டி. வி. முத்து கிருஷ்ணய்யர், சிவஞான முதலியார், கே. நாராயணஸாமி அய்யர், எஸ். பொன்னுஸாமி அய்யர், ஸிடி. ஸீவில் கோர்ட்டு சிரஸ்ததார் மிஸ்டர் டி. ஆர். ஸ்ரீனி வாஸய்யர், துபாஷ் மிஸ்டர் ஸி. ஆர். முருகேச முதலியார், மிஸ்டர் கடேச முதலியார், பி. வி. ஜகதீசய்யர் முதலிய இன்னும் அனேகம் கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஊர் பிரவேசஸ்தலம் முதல் ஸன்னிதித் தெரு முழுதும் கொடிகளாலும் தோரணங்களா லும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 24ஆ திங்கள் கிழமை பிற் பகல் முதலாக விருந்தினர்கள் வந்து கொண்டெ யிருந்தார்கள். ஒவ்வொரு வருக்கும் அவரவர் வரவர, சிற்றுண்டியும் காபி முதலியவையும் வழங்கப்பட்டன. பிறகு மாலை 7 மணி சுமாருக்கு எல்லாரும் குடைமுதலிய விருதுகளுடன் ஊர்கோலமாக ஆலயத்துக்குப் போக வும், அங்கே ஈசுவரனுக்கும் அம்மாளுக்கும் அர்ச்சனை, தீபாராதனை முதலியவைபவங்கள் சிறப்பாக நடந்தன. பிறகு அப்பாள் ஸன்னி தியில் பெங்களூர் நாகரத்தினம்மாளின் சக்கீதக் கச்சேரி நடை பெற்றது. இரவு 10 மணி சுமாருக்கு அறுசுவையோடுகூடின திவ் யான்ன போஜனம் செய்விக்கப்பட்டது. 25ஆ செவ்வாய்க் கிழமை காலமே சிற்றுண்டிகளும் காபியும், பகல் 12 மணிக்கு பக்ஷண வகை களுடன் கூடியசம்பிரமமான போஜனமும் இதன் மத்தியில் மலைக் கோவிலில் அபிஷேக அர்ச்சனைகளுடன் திவ்விய தரிசனமும் பக்ஷி தரிசனமும் எல்லோருக்கும் திருப்தியாகக்கிடைத்தன. திருப்பவும் அன்று பகலிலும் நாகரத்தினம்மாள் சங்கீதக் கச்சேரி நடைபெற் றது. அந்த அம்மாளுடன் பிடில்வாசிக்கும் சுப்பிரமணியய்யர் அவர்களின் ஹார்மோனியக் கச்சேரி மிகவும் சிலாகிக்கத்தக்கதாக விருந்தது. அவர் ஹார்மோனியத்தில் கீர்த்தனம், ராகம், பல்லவி, பதம் முதலியது வாசிக்கையில் பிடில் வாசிப்பதாகத் தோன்றியதே யொழிய ஹார்மோனியத்தில் வாசிப்பதாகத் தெரியவில்லை. அவர் திறமை புகழத்தக்கதே.

மாலை 5 மணிசுமாருக்கு தேக கச்சேரி(Tea Party)யுடன் இக் கொண்டாட்டம் முடிவு பெற்றது. இந்தக் கொண்டாட்டத்துக்கு வந்திருந்தவர்களெல்லோரையும் அமர்த்திப் புகைப்படம் எடுத்தார் கள். தேக்கச்சேரி முடிவு பெற்றதும் சம்பிரதாயப் பிரகாரம் வந்த னைப சாரப் பிரசங்கங்கள் நிகழ்ந்தன. ஸ்ரீமான் ஏ. இராமஸ்வாமி

முதலியார் M. L. C. அவர்கள் ஸ்ரீமான் ஜஸ்டிஸ் மாசிலாமணிப் பிள்ளையவர்களின் குணாதிசயங்களைப் பற்றி விசேஷமாகப் புகழ்ந்து பேசி, அவருக்கு ஹைகோர்ட்டு ஜட்ஜி வேலை கிடைத்ததில் வெகு ஜனங்கள் குதூஹல மடைவதாகச் சொன்னார்கள். பிறகு ஸ்ரீமான் மாசிலாமணிப்பிள்ளையவர்களும், கனம் இராஜகோபாலாசாரியார் அவர்களும் சமயோசிதமான வசனங்களை மொழிந்தனர். ஸ்ரீமான் இராஜகோபாலாசாரியார் அவர்கள் தமது முடிவுரையில், இனி தேச க்ஷேமார்த்தமாக உழைப்பவர்கள், பராபக்ஷமின்றியும், ஜாதிமதத் வேஷங்கள் பாராட்டமலும் உழைப்பதுடன் கவர்ண்மென்டார் நோக்கங்களுக்கு விரோதமாக ஒரு வேளை நடக்கநேரினும் ஒற்றுமையுடனும், சுதந்திரபுத்தியுடனும் நியாயவரம்புக் குள்ளடங்கியும் உழைத்தாலன்றி தேசம் க்ஷேமத்திற்கு வராதென்றும், இப்பொழுது கிடைத்திருக்கும் சீர்திருத்த நன்மைகள் பயன்படாமல் போவதுமன்றி அதிக சீர்திருத்தங்களைச் சமீப காலத்தில் பெற்று ஸ்வாதிபத்திய உரிமைக்கு அர்ஹர்களாவது கனவாகத்தான் ஆகுமென்றும் சொல்லி முடித்தார். ஸ்ரீமான் குமாரசாமி முதலியார் அவர்கள் இந்த வைபவக் கொண்டாட்டம் விமரிசையாக முடிய வேண்டி எடுத்துக் கொண்ட சிரமும், அவர் அங்கு வந்தவிருந்தினர் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்து அவர்களுக்குச் சௌகரியங்கள் புரிந்தபான்மையும், மிகவும் புகழத்தக்கது. இந்த ஊரில் இதற்குமுன் எப்பொழுதுமே இத்தகைய வைபவ கூட்டங்கள் நடைபெற்றதில்லையாம்.

ஸ்ரீமான் முதலியார் அவர்கள் திருக்கழுக்குன்றத்தைப்பற்றி அந்த க்ஷேத்திரத்தின் வரலாறு விசேஷங்களடங்கிய நூல் ஒன்றை ஸ்ரீமான் பி. வி. ஜகதீசய்யர் முதலிய கல்விமான்களின் சாதகத்துடன் இங்கிலீஷில் அழகிய சித்திரபடங்களோடு இயற்றி நல்ல காகிதத்தில் அச்சிட்டிருக்கிறார். இந்தமாதிரியாக ஒவ்வொரு க்ஷேத்திரங்களிலும் தகுந்த பிரபக்களோ தர்மகர்த்தாக்களோ முயன்று க்ஷேத்திர மகாத்மியங்களை இங்கிலீஷில் இயற்றி வெளியிடுதல் சிலாக்கியமாகும்.

T. R. S

"DIARCHY MUST GO."

SIR P. RAJAGOPALACHARI.

The "Manchester Guardian' wrote on 2nd February:—

Speaking at a farewell entertainment on the eve of his departure for England to serve on the India Council Sir P. Rajagopalachariar is reported to have unburdened himself as follows:—

'During the recent debate on the "no confidence" motion in the Madras Legislative Council I was impressed by certain aspects which showed me how impossible it is to continue the present system of Government. I hold no brief for the Ministers, but I must say I felt that a great many of the criticisms urged were really due to the system of Government under which the Ministers were working. Any Ministry would be subject to the same criticisms so long as diarchy continues. The only remedy is to have immediate and full provincial responsibility. Another aspect of the situation that strikes me is the evidence that is being given before the Royal Commission on the Services. The Services really want that the Ministers should have no control over them. No Government can get on if control over its Services is withdrawn. I expect all Indians to unite in opposing any attempt to curtail the powers and privileges of the Legislative Councils and the Ministers.

A knowledge of Sir P. Rajagopalachariar's career and personality lends significance to those pronouncements. He had a long and varied experience as a Madras civil servant. He was Prime Minister of one of the most important Native States. He was subsequently promoted to be a member of the Madras Executive Council. On the introduction of the reforms he became the first Speaker of the Madras Legislative Council. Indian Moderates re-

garded him as a reactionary, the most dangerous of the champions of the bureaucracy. Neither they nor his European colleagues ever questioned his extraordinary ability or his courage. He was reputed a great administrator and a great autocrat. He was known to have a sense of humour and an intellectual contempt for the applause of the multitude. A declaration from such a man in favour of full and immediate provincial responsibilty is striking evidence of the trend of opinion among able and experienced Indians. It should be considered in conjunction with the fact that the demand for responsibility in the Central Government of India has been endorsed by Sir Tej Bahadur Sapru, a Moderate politician who has himself served with distinction and won the confidence of his European colleagues on the Viceroy's Executive Council.

I have spent several my pleasant days in Tirukalukundram and have enjoyed its beauty natural and structural. Mr. M. M. Kumarasawmy Mudaliar has been most kind in showing me the temples both in this place and on the hill. The hill temple must have a special appeal to everyone from its splendid perfections and commanding position as well as in recent of its traditions. I was specially impressed by the ceremony of feeding the eagles performed with much devotion and gravity before a reverent company of pilgrims. Mr. Kumaraswamy Mudaliar is also chairman of the Union and has learnt the secret of how to retain the goodwill and affection of the towns people in that difficult position.

(Sd.) C. B. COTTERELL.
16-3-24.

I have visited, and worshipped at the ancient shrine of Tirukalukundram, with the Maharanee Sircar and the Maharaja Qumari Sahebul of Jeypore with twenty followers.

I am also much obliged for the trustee for the nice arrangements he has made for me.

(Sd.) RAMACHANDRA.
25-3-24.
MAHARAJA OF JEYPORE,
Vizag. District.

I came down here about the middle of November 23 and have now been here for nearly $3\frac{1}{2}$ months. With his usual courtesy and kindness Mr. M. M. Kumarasawmy Mudaliar has been of considerable assistance to me in securing accommodation, Servants, &c. My stay here has thus been made so comfortable that I am inclined to possess a house in this sacred place. During my stay here I have found that Mr. Mudaliar by his tactfulness and ready resourcefulness is able to manage the temple of which he is the Dharmakartha and the Union of which he is the President, in an efficient manner on what appears to be an inadequate income I have not been able to see any one in this place who can fittingly succeed him in the positions he now occupies in this sacred city.

T. Kundram,
26*th March* 1924.

(Sd.) T. N. SARMA.
26—3—24.
Dy. AUDITOR, O & R. Ry.,
Indian Audit & Accounts Senior.

A party of four of us visited the place to-day and saw all the places of interest and the feeding of the kites.

We are greatly obliged to our Kumarasawmy Mudaliar for making our stay so comfortable and nice.

(Sd.) E. SRINIVASACHARI,
20-4-24.

Mr. Rao Sahib C. Ramaswami Aiyangar.
2. Sadhus of Sri Ramakrishna Mutt.

Tirukalikundram,
Dated, 2nd July, 1920.

To

The Hon'ble Dewan Bahadur
SIR P. RAJAGOPALACHARIAR AVARGAL,
M. A., B. L., K. C. S. I., C. I. E.
Member of the Executive Council of the
Governor of Fort Saint George,
Madras.

May it please you Sir,

We, the residents of Tirukalikundram, beg to offer you our most cordial welcome to this historic ancient and sacred place. Our heartfelt and sincere pleasure in welcoming Lady Rajagopalachariar and your esteemed self into our midst is all the more intense since Sree Vedagireeswara in His Divine Mercy has been pleased to spare you after recent serious illness on your way to India from England for yet more glorious work beneficial to our countrymen and for loyal service to our Benign Government. We earnestly pray Sree Vedagireeswara, the Almighty, to extend your life for many more useful years to come.

2. Though this place is a small one, with a population of about 8000, yet it is second to none in its historic, religious and devotional importance. It contains one of the most sacred shrines in Southern India and is a very important place of pilgrimage, attracting, as it does, a large number of pilgrims daily from all parts of India. Besides being a place of growing importance on account of its sacred character as a place of pilgrimage, it is also a health resort to which people suffering from various diseases come to obtain a cure by the miraculous aid of the salubrious air and Sanku-Thirtham.

3. To meet the necessities of a floating population like the pilgrims, a medical institution and a good system of fresh water-supply were long-felt wants. When

Sir P. S. Sivasami Iyer, the then Executive Council Member, was here, he with his usual kindness realised our wants and the necessity to satisfy them, and set on foot a proposal for the building of a medical institution and the inauguration of a scheme of water supply. In performance of a pleasant duty, we offer him, through you, Sir, our sincere thanks for his initial efforts through which we have now been able to see the fruition of one of our daily wants.

4. The scheme for the supply of fresh water inaugurated by him, is now, we understand, with the Sanitary Engineer to the Government of Madras; and we request you to extend your kind sympathy towards the scheme and bring to a finish a useful project started by our countryman and your illustrious predecessor in office

5. We beg leave to mention that in the circumstances you are the best fitted to perform this pleasant function of opening the dispensary, an institution which is bound to be very useful to the permanent and floating population of this place, in as much as you are a revered citizen of our district and the welfare of this district and its institutions are, amongst others, nearest your heart through all your arduous and multifarious duties.

6. We may assure you, that but for your watchful eye over the development of local self-governing institutions, we would not have been in a position to realise so soon a long-felt want, and it is our knowledge that this sacred place has a warm corner in your heart that enables us confidently to hope to get in the nearest future a satisfactory scheme of water supply to this health resort.

7. We cannot let slip this occasion without offering our thanks to the Presidents of the District and Taluk Boards, who enthusiastically and energetically carried out the scheme. We are much indebted to the late Rajah Sir Savalai Ramaswami Mudaliar, that distinguished and patriotic countryman of ours, who is the donor of so many charities all over the country and who entertained the idea

of building a hospital here, which he would have done had Providence but spared him a little longer, and we offer our thanks to his son M. R. Ry. S. V. Ramaswami Mudaliar Avl., who in fulfilment of his father's wishes presented the site and contributed a sum Rs. 2,500 towards the cost and the building will be named after his father. We have also to thank the Government for having allotted a sum of about Rs. 4,500 during the present financial stress towards this charitable purpose.

In conclusion we thank Lady Rajagopalachariar and your esteemed self for having taken the trouble to come down to perform this pleasant function and all of us fervently pray to Sree Vedagireeswara and Tirupura Sundari to bless you with long life and happiness, so that we may have in you always a sympathetic champion of our cause.

We beg to remain,
May it please you Sir,
Your most obedient servants,

Tirukkalikundram,
Dated 2nd July, 1920.

To

THE HON'BLE DEWAN BAHADUR
SIR P. RAJAGOPALACHARIAR AVARGAL,
M. A., B. L., K. C. S. I., C. I. E.,
Member of the Executive Council of the
Governor of Fort Saint George,
Madras.

May it please you Sir,

We, the members of the Chingleput Taluk Board, beg leave to approach you, and offer Lady Rajagopala-

chariar and you, our respectful and hearty welcome to this sacred place in our district, whose sanctity has been sufficiently expressed in the address presented to you by the citizens of this place. We thank Lady Rajagopalachariar and yourself for the trouble you have taken to come down from the Hills in this hot weather for the purpose of performing this small yet very pleasant function of opening the dispensary.

2. We all feel it is due only to the kind and wholehearted support of the Government that we are in a position to have a medical institution in this place. We may assure you that your earnest support in the cause of local self-government has resulted in the district and some of our taluk boards to have non-official Presidents and that they are progressing very well.

3. Your unerring instinct aided by your vast and varied experience has enabled you to pick out suitable men to be placed at the head of self-governing Institutions and your sympathy for the evolution of the local self-government has brought together and drawn forth all the powers that were latent till now. We earnestly hope that under your guidance at no distant date all local bodies would be fully developed.

4. We cannot let slip this opportunity without mentioning the name of M. R. Ry. M. M. Kumaraswami Mudaliar Avl., the Dharmakartha of the local temple and Chairman of this Union, to whose efforts mainly this medical institution owes its existence, and for whose untiring labours and zeal for the efficient management of this important temple, the Hindu public owes so much.

5. We have to offer our heartfelt thanks to Sir P. S. Sivaswami Iyer, your esteemed predecessor, for the genuine sympathy he evinced towards the schemes for remedying the two real wants of this place and to M. R. Ry. S. V. Ramaswami Mudaliar Avl., for his generosity in presenting the site and for his contribution of

Rs. 2,500 towards the cost and to the Government for its grant of about Rs. 4,500 during a period of great financial stress.

6. In conclusion we thank you Sir and request you to declare the dispensary open.

We beg to remain,
May it please you Sir,
Your most obedient servants,

———

Tirukalukundram (*Via*) Chingleput
8th January 1923.

M. M. Kumaraswami Mudaliar,
TRUSTEE.

The following suggestions on "THE MADRAS HINDU RFLIGIOUS ENDOWMENT BILL 1922" are submitted to the Select Committee for consideration with the request he may be heard also personally to explain them in detail:—

Introductory.

In an Indian world where custom and, consequently sentiment largely govern men's ideas, specially their religious institutions, it is always better to be wary in our attempt to deal with them, however well intentioned we might be and whatever our authority might be at present. The "change in the character of the Executive Government" imposes on the authority a greater responsibility and circumspection as any action taken would no longer be attributed to ignorance but to deliberate prejudice obsessed by ideas stimulated by foreign culture and influence. Dealing as the bill does, with a delicate question affecting the Hindu community which rightly or otherwise considers the institutions as sacrosanct, our procedure ought to be deliberate and not hasty.

But it may be generally conceded that the institutions under consideration have not been under proper management, not to speak of deliberate maladminisration in well known cases. It may also be admitted further that the existing legislative machinery are quite inadequate in dealing with such mismanagement.

3. The defects under the present Act have been clearly and briefly set out in the "Statement of Objects and Reasons" appended to the Bill.

In attempting to remove these defects we have to remember and keep in view the main objects :—

(*a*) The maintenance of the Endowments in proper condition and for the promotion of the *objects* for which alone they were founded.

(*b*) The *non-diversion* of the funds of the Endowment by the trustees, for their own personal benefit or for any purpose other than those for which they were founded.

